# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,480 – 1965 අගෝස්තු 13 වැනි සිකුරාදා 1965.8.13

14,480 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகஸ்து மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யுமைப் பொருட்டு தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகளை—வெற்றிடம் .. | — | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 265 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 259 | அந்நிய குடிவகை உத்தரவுப் பத்திர விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகளைப்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. | 265 | நானாவித அறிவித்தல்கள் . . | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### திருகோணமலையில் "உலு" வள்ளம் விற்பனை

திருகோணமலைத் துறைமுகத்தில் சுங்கப் பாலத்திற் கருகாமையில் நங்கூரம் இடப்பட்டுள்ள " உலு " வள்ளம் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

இதன் நிறை 6·79 தொன்களாகும். இவ் வள்ளம் கொங்காங் துறைமுகத்திற் பதிவுசெய்யப்பட்டது.

இதனைத் திருகோணமலைத் துறைமுகத்திற் பார்வையிடலாம். இவ் வள்ளத்தைப் பார்வையிட விரும்பும் எவரும், சேதமுற்ற ஓடங்களை ஏற்பவரும் திருகோணமலைச் சுங்க சேகரிப்பாளருமான உத்தியோகத்தருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் திகதி மு. ப. 9.30 மணிவரை திருகோணமலைக் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள், 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ம் திகதி மு. ப. 10.30 மணிக்கு, சேதப்பட்ட ஓடங்களை ஏற்பவரான திருகோணமலை அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்வியாளர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

திருகோணமலை துறைமுக உள்வீதியில் இருக்கும் உபசேகரிப்பாளருடைய அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பப் பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். கேள்வி விண்ணப்பப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/– கட்டுப்பணம் செலுத்தப்படவேண்டும். இத்தொகையை விற்பனை முடிந்த பின் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாற்றங்கள் யாவும் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும், சேதப்பட்ட ஓடங்களைப் பாரமெடுப்பவரான திருகோணமலை சுங்க சேகரிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். "கேள்விப் பத்திரங்களின் உறையின் இடது பக்க மேல் மூலையில் ' உலு ' வள்ளம் பெறுவதற்கான கேள்விப் பத்திரம்" என்று இடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள், கச்சேரியில் இதற்கெனவுள்ள பெட்டியில் இடலாம். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம்.

இவ்வள்ளத்திற்கான கேள்வித் தொகையினுள் சுங்க வரியும் அடங்கும் என அறியவும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தமக்கு அறிவித்தல் கிடைத்து ஒரு வாரத்திற்குள் விற்பனையைப் பூர்த்தி செய்து வள்ளத்தை உரித்தாக்கிக்கொள்ள வேண்டும். தவறுமிடத்து சேதப்பட்ட ஓடங்களை ஏற்பவரான சுங்கசேகரிப்பாளர் (திருகோணமலை) கட்டுப்பணத்தை பறிமுதலாக்குவதுமன்றி வள்ளத்தை திரும்பவும் விற்பனைக்கு விடுவர்.

சேதமுற்ற ஓடங்களை ஏற்பவரான சுங்க சேகரிப்பாளர், கேள்விப் பத்திரங்களில் எதையும் அல்லது எல்லாவற்றையும் காரணங்கூறாது நிராகரிக்கும் உரிமையை உடையவராவார்.

எம். பி. சேனநாயக்க,
சுங்க சேகரிப்பாளரும் சேதப்பட்ட ஓடங்களை ஏற்பவரும்.

எனது இல. ரி. ஆர். சி./440
சுங்க அலுவலகம்,
திருகோணமலை,
2.8.65.

8–1349—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

---

### கடற்றொழிற் பகுதி

#### நீர்கொழும்பு கடற்றொழிலாளர் பயிற்சி நிலையத்தில் உணவளிப்பதற்கான கேள்விகள்

நீர்கொழும்பு அர்ச். செபஸ்தியான் ஒழுங்கையிலமைந்துள்ள கடற்றொழிலாளர் பயிற்சி நிலையத்துப் பணியாளர்களுக்குப் பயிற்சி பெறுவோர்களுக்கும் உணவு சிற்றுண்டி விநியோகிக்கும் உரிமைக்கான கேள்விகளை 1965 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27 ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணி வரையும் கடற்றொழில் அதிபர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விகள் இக்காரியாலயத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலமைய வேண்டும். படிவத்துடன் கொந்தராத்து விபரங்களையிட்ட கூறறொன்றும் வழங்கப்படும். கேள்விப் படிவம் வழங்கப்படுவதற்கு முன்னர் ரூபா 10/– வைப்புப் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

கேள்விப் பத்திரங்களுக்கான விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் (1) பெயரும் முகவரியும் (2) தான் முன்னர் நடாத்திய கொந்தராத்து விபரங்கள் ஆகியவற்றைத் தனது விண்ணப்பத்தில் வழங்க வேண்டும்.

எஸ். எஸ். எச். சில்வா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழில் பகுதி,
காலி முகம், கொழும்பு 3,
ஆகஸ்டு 3, 1965.

8–264—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும் பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1965 ம் ஆண்டு அக்டோபர் 1 ந் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து, சுகாதார அலுவலகங்களிலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து, மாத்தளைப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. **(அ) கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**(ஆ) கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப் பத்திரங்கள், அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர், தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத்தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன், சுகாதார சேவை அத்தியட்சகர், மாத்தளை என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ் மூலையில் அனுப்புவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது, இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும் ஒப்பந்தத்தில் பிரத்தியோகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்டகாலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.** தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய விபரங்கள் அனைத்தையும் மாத்தளை சுகாதார சேவை அத்தியட்சகருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மாத்தளை,
1965 ம் ஆண்டு ஆவணி மீ 4 ந் வ.

ஏ. உடவத்தை,
சுகாதார சேவை அத்தியட்சகர், மாத்தளை.

### மேல் கூறப்பட்ட அட்டவணை

| (1) சேவை | (2) பகுதி | (3) மாதாந்த உத்தேசத் தொகை பயின்ற் | (4) கேள்விகள் மூடப்படும் திகதி |
|---|---|---|---|
| 1. மாத்தளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலிருந்து மாத்தளைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலையங்களுக்கு .. .. .. | மாத்தளை .. | 5,520 | 31.8.65 காலை 10 மணி |
| 2. மாத்தளை பால் சபை நிலையத்திலிருந்து இரத்தோட்டை சுகாதார பொறுப்பு அதிகாரி காரியாலயத்திற்கும், இரத்தோட்டைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலையங்களுக்கும் | இரத்தோட்டை .. | 2,220 | |
| 3. இங்குருக்கொடை புகையிரத நிலையத்திலிருந்து அல்லது பொலநறுவை மத்திய கால் நடை ஆராச்சி நிலையத்திலிருந்து இங்குருக்கொடை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கும், இங்குருக்கொடைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலையங்களுக்கும்.. | இங்குருக்கொடை | 5,611 | |

8-334/1—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பால் மாவும் சீனியும் விநியோகித்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1965 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி முடிய உள்ள காலம் வரைக்கும், கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளின், பொறுப்புள்ள அதிகாரிகளின் காரியாலயங்கள், களஞ்சியத் திடுகைகளின் ஊடாக புகையிரத நிலையங்களிலிருந்து பால் மாவும், ஐக்கிய பண்டசாலை களிலிருந்து சீனியும் பால் ஊட்டப்படும் நிலையங்கட்கு, விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மாத்தளைப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (அ) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூ. 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப் பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கும் முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டு இணைக் கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடை யும் காலத்திற்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரக்காரர்கள், கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன் கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட் சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிருபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேச தொகைகள் கொடுக் கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன், சுகாதார சேவை அத்தியட்சகர், மாத்தளை என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல்மூலையில் சேவையின் தன்மையும், கீழ்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலு வலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் மாத்தளை சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மாத்தளை,
1965 ம் ஆண்டு ஆவணி மீ 4 ந் உ.

ஏ. உடவத்தை,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
மாத்தளை.

### மேல் கூறப்பட்டுள்ள அட்டவணை

| (1) சேவை | (2) பிரிவு | (3) உத்தேசத் தொகை — பால்மா அந்தர் | (3) உத்தேசத் தொகை — சீனி அந்தர் | (4) மூடப்படும் கேள்வித் திகதி |
|---|---|---|---|---|
| 1. மாத்தளை புகையிரத நிலையத்திலிருந்து பால் மாவும், மாத்தளை ஐக்கிய பண்டக சாலை சங்கத்திலிருந்து சீனியும் மாத்தளை சுகாதார வைத்திய காரியாலயத் திற்கும் மாத்தளைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. | மாத்தளை .. | 21½ .. | 8¼ | 31.8.65 காலை 10 மணி |
| 2. கதுறுவெலை புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும், பொலநறுவையிலிருக் கும் தம்புன்கடவை ஐக்கிய பண்டகசாலை சங்கத்திலிருந்து சீனியும் ஹிங்குருக் கொடை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கும் ஹிங்குருக்கொடைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. | ஹிங்குருக்கொடை | 10¾ .. | 4½ | 31.8.65 காலை 10 மணி |
| 3. கெக்கிருவை புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் தம்புல்லை ஐக்கிய பண்டகசாலை சங்கத்திலிருந்து சீனியும் தம்புல்லை சுகாதார பொறுப்பு அதி காரி காரியாலயத்திற்கும் தம்புல்லைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. .. .. .. | தம்புல்லை .. | 22½ .. | 8 | 31.8.65 காலை 10 மணி |
| 4. மாத்தளை புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் மாத்தளை ஐக்கிய பண்டக சாலை சங்கத்திலிருந்து சீனியும் இரத்தோத்டை சுகாதாரப் பொறுப்பு அதிகாரி காரியாலயத்திற்கும் இரத்தோட்டைப் பகுதியிலிருக்கும் பால் ஊட்டும் நிலை யங்களுக்கும் .. .. .. .. | இரத்தோட்டை .. | 31 .. | 12 | 31.8.65 காலை 10 மணி |

8-334/2—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

## கல்விப் பகுதி

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலை வேலைகள் சம்பந்தமாகக் கேள்விப் பத்திரங்கள், கேள்விச்சபைத் தலைவரால் அக்கரைப்பற்று கல்விக் காரியாலயம், 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் திகதி வெள்ளிக் கிழமை மு. ப. 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பாடசாலையின் பெயர் :—அக். அட்டாளைச்சேனை அ. மு. ஆ. ப. கலாசாலை

வேலைவிபரம் :—ஆறு அறைகளைக்கொண்ட மலகூடம் அமைத்தல்

தேவையான பதிவு :—ரூபா. 10,000.00

(2) இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்விப்பகுதியிலும், பகிரங்க வேலைப்பகுதியிலும் மேற்கூறப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்ட கொந்தராத்துக்காரருக்கு ஆகஸ்ட் மாதம் 26 ந் திகதி பகல் 12.00 மணிவரையும் ஒவ்வொரு வேலைக்கும் கிழக்குப்பிராந்திய உதவி வித்தியாதிபதி கந்தோரிலோ, கொழும்பு 2 கல்விப்பகுதியிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதி கச்சேரியிலோ ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 100/– கட்டுப்பணம் கட்டிக் கிடைக்கும் பற்றுச்சீட்டை அக்கரைப்பற்றுக் கல்வி யதிகாரியிடம் சமர்ப்பித்துக் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். காசோலை, மணிஓடர், போஸ்டல்ஓடர் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கட்டுப்பணம் கட்டுவதற்குத் தேவையான பத்திரங்களை கொழும்பு 2, கல்விப்பகுதி S. W. கிளையிலும், அக்கரைப்பற்று கல்வி யதிகாரியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணம் கட்ட வேண்டிய பத்திரங்கள் மேலே குறிப்பிட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதற்குரிய அத்தாட்சியைச் சமர்ப்பிப்போருக்கு மட்டுமே வழங்கப்படும்.

(3) அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் இரண்டாம் பிரிவில் குறிப்பிட்ட தொகைக்கு நீர்ப்பாய்ச்சல் பகுதியிலோ அல்லது பகிரங்க வேலைப் பகுதியிலோ அல்லது கல்விப் பகுதியிலோ பதிவு செய்யப்பட்டிருந்தால் மேற்கூறிய வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். சங்கங்கள் பரிமாணப் பத்திரங்களை நிரப்பவேண்டியதில்லை. இச்சங்கங்கள் வேலைகளின் அளவைக்கேற்ப கல்விப்பகுதி மதிப்பீட்டுத்தொகைக்குச் செய்யச் சம்ம தத்தை மட்டும் தெரிவித்தால் போதுமானது. அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் அவைகட்கு வழங்கப்படும் விசேட கேள்விப்பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். சங்கங்கள் கட்டுப்பணம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் விசேட கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படு முன் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதற்குரிய அத்தாட்சியைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(4) இரண்டாம் மூன்றும் பிரிவில் குறிப்பிட்டபடி இரட்டைப் பிரதியில் விண்ணப்பிக்கவேண்டிய கேள்விப்பத்திரங்கள் அக்கரைப்பற்றுக் கல்வி யதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். அன்னாரின் காரியாலயத்தில் வேலைகளுக்குரிய விளக்கப்படங்களையும் மேலதிக விபரங்களையும் பார்வை யிடலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால் மூலம் கேள்விச் சபைத்தலைவர், கல்விக்காரியாலயம், அக்கரைப்பற்று என்ற விலாசமிட்டு அனுப்பவேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத விண்ணப்பக்காரர்கள் நேரிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை அக்கரைப்பற்று கல்விக்காரியாலய உதவியாளரிடம் சமர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மீது வேலைகளின் விபரங்களும் விண்ணப்பக்காரர் பெயரும் விலாசமும் எழுதப்பட வேண்டும்.

(5) 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் திறந்து பரிசீலனை செய்யப்படும். விண்ணப்பப்பத்திரங்கள் பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண் ணப்பக்காரர்களுக்கு விண்ணப்பத்தொகைகளும், விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக்காட்டப்படும்.

(6) விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை யிலும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகவிருக்கும்.

(7) அக்கரைப்பற்றுக் கல்விக்காரியாலயத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வேலை சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் பார்வையிடவும் முடியும்.

(8) ஓடுகள் பாவிக்கவேண்டிய கட்டிடங்களுக்கு இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளையே பாவிக்கவேண்டும். ஓடுகளின் தரத்தை நிச்சயப் படுத்த வேண்டியேற்பட்டால அதற்கு வேண்டிய சோதனைகளை இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் விண்ணப்பக்காரர்களின் செலவில் நடாத்தமுடியும்.

(9) இவ்வேலை 30.9.1965 ந் திகதிக்கு முதல் முடிவடைய வேண்டும்.

எம். எஸ். எம். ஹத்தாத்,
கல்வியதிகாரி, அக்கரைப்பற்று.

கல்விக்காரியாலயம்,
அக்கரைப்பற்று,
7.8.1965.

8–411—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

---

## 1965/66 ம் நிதி வருடத்தில் மட்டக்களப்பு, அக்கரைப் பற்று, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங் களில் கெயர் மா ஏற்றிக்கொடுத்தல்

1965–66 ம் நிதிவருடத்தில் பின்வரும் நிலையங்களிலிருந்து 50 இருத்தல் அல்லது 150 இருத்தல் கொண்ட மூடை கெயர் மா ஏற்றுமதிக்கான ஒப்பந்த கேள்விப் பத்திரங்கள் (இரட்டைப் பிரதி களில்) மட்டக்களப்பு கல்வி அலுவலககேள்விச் சபைத்தலைவரால் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) மட்டக்களப்பு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து மீட்டக்களப்பு, அக்கரைப்பற்று, அம்பாரை மாவட்டங்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாண்காரர்களுக்கு ஏற்றிக் கொடுத்தல் ;

(ஆ) திருகோணமலை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள அங் கீகரிக்கப்பட்ட பாண்காரர்களுக்கு ஏற்றுக்கொடுத்தல்.

2. ஒப்பந்த கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய உதவிக்கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரங் களில் விண்ணப்பிக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை 12 மணி வரையும் விநி யோகிக்கப்படும். மட்டக்களப்பு கல்வி அலுவலகத்திலோ அல்லது ஒரு கச்சேரியிலோ ரூபா 100 கட்டுப்பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டு சமர்ப்பித் தால்த்தான், ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். அங் கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திரத்திற்காய கட்டுப்பணம் கட்டு வதினின்று விலக்கப்படும்.

3. கிடைக்கப்பெற்ற ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய கல்வி அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வமயம் ஒப்பந்த கேள்விப் பத்திரதாரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

4. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் விண்ணப்பம் செய்ய விரும்புவோர், மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய உதவிக்கல்விப் பணிப் பாளர், திருப்திப்படும்வகையில் குறைந்தது ரூபா 15,000 பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனம் உள்ளவரென்று ஒரு பெறுமதிக்கடிதமும், தனது பெயரில் பதியப்பட்ட குறைந்தது ஒரு லொறியாகுதல் அவருக்கு உண்டென்றும். அவை நடப்பு வருட லைசென்ஸ் பெறப்பெற்றதென்றும் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆகியன மேற்படி சேவைக்கான ஒப்பந்தகேள்விப் பத்திரங்களைச் சமர்ப் பிக்கலாம். எனினும் கேள்விப் பத்திரங்கள் வழங்கமுன் இச்சங்கங்கள் முறையே கூட்டுறவுச்சங்க ஆணையாளர், கிராம அபிவிருத்திச்சங்க அதிபர் அல்லது தொழில் ஆணையாளர், ஆகியவர்களில் உரியவரிடமிருந்து இச்சேவைகளைச் செய்வதற்கு குறிப்பிட்ட ஒரு சங்கம் தகுதியுள்ளதென்று அத்தாட்சி பத்திரம் சமர்பிக்கவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களில் ஏதாவது ஒரு பகுதியை ஏற்கவோ அல்லது முற்றாக நிராகரிக்கவோ கேள்விச் சபைத் தலைவருக்கு உரி மையுண்டு.

6. இது சம்பந்தமான மேலும் விபரங்களுக்கு மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

எல். ஆர். பெரேரா,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கிழக்குப் பிராந்தியம், மட்டக்களப்பு.

கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு, 1965 ந் ௵ ஆவணி ௴ 5 ந உ.

8–388—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

## கல்விப் பகுதி

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலை வேலைகள் சம்பந்தமாகக் கேள்விப் பத்திரங்கள், கேள்விச்சபைத் தலைவரால் கல்விப்பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2, 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ம் திகதி வெள்ளிக் கிழமை மு. ப. 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலைவிபரம் |
|---|---|
| அக்/சம்மாந்துறை முஸ்லிம் மஹா வித்தியாலயம் | நான்கு வகுப்பறைகள் கட்டு தலில் எஞ்சிய வேலை |

தேவையான பதிவு

ரூபா 17,000.00

(2) இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்விப்பகுதியிலும், பகிரங்க வேலைப் பகுதியிலும் மேற்கூறப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்ட கொந்தருத்துக்காரருக்கு செப்டம்பர் மாதம் 2 ந் திகதி பகல் 12.00 மணிவரையும் ஒவ்வொரு வேலைக்கும் கிழக்குப்பிராந்திய உதவி வித்தி யாதிபதி கந்தோரிலோ, கொழும்பு 2 கல்விப்பகுதியிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதி கச்சேரியிலோ ஒவ்வொரு வேலைக்கும் ரூ 100/- கட்டுப்பணம் கட்டிக் கிடைக்கும் பற்றுச்சீட்டை அக்கரைப்பற்றுக் கல்வியதி காரியிடம் சமர்ப்பித்துக் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். காசோலை, மணி ஓடர், போஸ்டல் ஓடர் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கட்டுப்பணம் கட்டுவதற்குத் தேவையான பத்திரங்களை கொழும்பு. 2, கல்விப்பகுதி S. W. கிளையிலும், அக்கரைப்பற்று கல்வியதிகாரியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணம் கட்ட வேண்டிய பத்திரங்கள் மேலே குறிப்பிட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதற்குரிய அத்தாட்சியைச் சமர்ப்பிப்போருக்கு மட்டுமே வழங்கப்படும்.

(3) அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் இரண்டாம் பிரிவில் குறிப்பிட்ட தொகைக்கு நீர்ப்பாய்ச்சல் பகுதியிலோ அல்லது பகிரங்க வேலைப்பகுதி யிலோ அல்லது கல்விப்பகுதியிலோ பதிவு செய்யப்பட்டிருந்தால் மேற் கூறிய வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். சங்கங்கள் பரிமாணப்பத்திரங் களை நிரப்பவேண்டியதில்லை. இச்சங்கங்கள் வேலைகளின் அளவைக்கேற்ப கல்விபகுதி மதிப்பீட்டுத்தொகைக்குச் செய்யச் சம்மதத்தை மட்டும் தெரிவித்தால் போதுமானது. அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் அவைகட்கு வழங்கப்படும் விசேட கேள்விப்பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். சங்கங்கள் கட்டுப்பணம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் விசேட கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டதற்குரிய அத்தாட்சியைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(4) இரண்டாம் மூன்றும் பிரிவில் குறிப்பிட்டபடி இரட்டைப் பிரதியில் விண்ணப்பிக்கவேண்டிய கேள்விப்பத்திரங்கள் அக்கரைப்பற்றுக் கல்வி யதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். அன்னாரின் காரியாலயத்தில் வேலைகளுக்குரிய விளக்கப்படங்களையும் மேலதிக விபரங்களையும் பார்வை யிடலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால் மூலம் கேள்விச்சபைத் தலைவர், கல்விப்பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2, என்ற விலாசமிட்டு அனுப்பவேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத விண்ணபக்காரர்கள் நேரிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை கொழும்பு, கல்விப்பகுதி உதவியாள ரிடம் சமர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மீது வேலைகளின் விபரங்களும் விண்ணபக் காரர் பெயரும் விலாசமும் எழுதப்படவேண்டும்.

(5) 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் திறந்து பரிசீலனை செய்யப்படும். விண்ணப்பப்பத்திரங்கள் பார்வையிடும்பொழுது விண்ணபக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப் பக்காரர்களுக்கு விண்ணப்பத்தொகைகளும், விண்ணபக்காரர்களின் பெயர்களும் வாசித்துக்காட்டப்படும்.

(6) விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரையி லும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகவிருக்கும்.

(7) அக்கரைப்பற்றுக் கல்விக்காரியாலயத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வேலை சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் பார்வையிடவும் முடியும்.

(8) ஓடுகள் பாவிக்கவேண்டிய கட்டிடங்களுக்கு இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளையே பாவிக்கவேண்டும். ஓடுகளின் தரத்தை நிச்சயப் படுத்த வேண்டியேற்பட்டால் அதற்கு வேண்டிய சோதனைகளை இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் விண்ணபக்காரர்களின் செலவில் நடாத்தமுடியும்.

எம். எஸ். எம். ஹத்தாத்,
கல்வியதிகாரி, அக்கரைப்பற்று.

கல்விக்காரியாலயம்,
அக்கரைப்பற்று.
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 5 ந வ.

8–349—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

---

## 1965/66 ம் நிதி வருடத்தில், மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, திருகோணமலை, அம்பாரை ஆகிய மாவட்டங்களில் கெயர் பால் மா ஏற்றிக்கொடுத்தல்

1965/66 ம் நிதி வருடத்தில் பின்வரும் விநியோக நிலையத்திலிருந்து கெயர் பால் மா ஏற்றுமதிக்கான கேள்விப் பத்திரங்கள் (இரட்டைப் பிரதியில்) மட்டக்களப்பு கல்வி அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) மட்டக்களப்பு உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலை யத்திலிருந்து மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, அம்பாரை, மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ஏற்றிக்கொடுத்தல்.

(ஆ) திருகோணமலை உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாட சாலைகளுக்கு ஏற்றிக்கொடுத்தல்.

2. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய உதவிக்கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரங் களில் விண்ணப்பிக்கவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ம் திகதி வியாழக்கிழமை 12 மணிவரையும் விநியோகிக்கப்படும். மட்டக்களப்பு கல்வி அலுவலகத்திலோ அல்லது ஒரு கச்சேரியிலோ ரூபா 100 கட்டுப்பணமாக கட்டிய பற்றுச்சீட்டை சமர்ப்பித்தால்த்தான் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பத்திரத்திற்காய கட்டுப்பணம் கட்டுவதினின்று விலக்கப்படும்.

3. கிடைக்கப்பெற்ற ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வமயம் ஒப்பந்த கேள்விப் பத்திரதாரர்கள் பிரசன்ன மாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

4. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய உதவி கல்விப் பணிப்பாளர் திருப்திப்படும் வகையில் குறைந்தது ரூபா 15,000 பெறு மதியுள்ள அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளரென்று ஒரு பெறு மதிக் கடிதமும், தனது பெயரில் பதியப்பட்ட குறைந்தது ஒரு லொறி யாகுதல் அவருக்கு உண்டென்றும் அவை நடப்பு வருட லைசென்ஸ் பெறப்பெற்றதென்றும் அத்தாட்சிபடுத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களா, கிராம அபி விருத்திச் சங்கங்கள், ஆகியன மேற்படிச் சேவைக்காக ஒப்பந்த கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். எனினும் கேள்விப் பத்திரம் வழங்கமுன் இச் சங்கங்கள் முறையே கூட்டுறவுச் சங்க ஆணையாளர் கிராம அபிவி ருத்திச்சங்க அதிபர், அல்லது தொழில் ஆணையாளர், ஆகியவர்களில் உரியவரிடமிருந்து இச் சேவைகளைச்செய்வதற்கு குறிப்பிட்ட ஒரு சங்கம் தகுதியுள்ளது என்ற அத்தாட்சி பத்திரம் சமர்ப்பிக்கவேண்டும்.

5. கேள்விப் பத்திரங்களில் ஏதாவது ஒரு பகுதியை ஏற்கவோ அல்லது முற்றாக நிராகரித்து விடவோ கேள்விச் சபைத் தலைவருக்கு உரிமை யுண்டு.

6. இது சம்பந்தமாக மேலும் விபரங்களுக்கு மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

எல். ஆர். பெரேரா,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கிழக்குப் பிராந்தியம், மட்டக்களப்பு.

கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு, 1965 ந் ஆண்டு ஆவணி மீ 5 ந வ.

8–386—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

## கல்விப் பகுதி

**கெயர் பால்மாவும் கெயர் உறெட்டிமாவும் சேகரித்து வைக்கப் பட்டிருக்கும் கொழும்புப் பிரதேச (அதாவது கொழும்பு, நீர்கொழும்புப் பிரிவுகளிலுள்ள) நிலையங்களிலிருந்து முறையே பாடசாலை அதிபர் களுக்கும் உத்தரவுபெற்ற பாண்காரருக்கும் 1965/66 ம் ஆண்டு ஏற்றி அனுப்புவதற்குரிய கேள்விப் பத்திரங்கள்**

1.10.65 தொடக்கம் 30.9.66 வரைக்கும் உரிய காலத்தில் செய்ய வேண்டிய பின்குறிக்கப்படும் சேவைகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள 6.9.65 ந் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிவரைக்கும் அக்கிராசனர், கேள்விச் சபை (ரெண்டர் போட்), வித்தியா கந்தோர், கொழும்பு றீச்சன், கிறீன் பாத், கொழும்பு 7, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சேவைக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

**கொழும்பு தெற்கு வித்தியா பகுதியிலுள்ள சேவைகள் :**

(i) கொழும்பு தெற்கு வித்தியா பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு உறெட்டி கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பாண்காரருக்குச் சார்மஸ கிருனறி நிலையத்திலிருந்து கெயர் உறெட்டி மா ஏற்றி அனுப்புவது.

(ii) கொழும்பு நகரசபைப் பகுதிகளிலும், மொறட்டுவாப் பகுதிகளிலு முள்ள பாடசாலைகளுக்குச் சார்மஸ் கிருனறி நிலையத்திலிருந்து கெயர் பால் மா ஏற்றி அனுப்புவது.

**கொழும்பு வடக்கு வித்தியா பகுதியிலுள்ள சேவைகள் :**

(iii) வத்தளை, மகாற, கெலனியா, வெதமுல்ல பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு உறெட்டி கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பாண்காரருக்கு சார்மஸ் கிருனறி நிலையத்திலிருந்து கெயர் உறெட்டி மா ஏற்றி அனுப்புவது.

(iv) மினுவாங்கொடை, நீர்கொழும்புப் பகுதிகளிலுள்ள பாடசாலை களுக்கு உறெட்டி கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பாண்காரருக்கு நீர் கொழும்பு நிலையத்திலிருந்து கெயர் உறெட்டி மா ஏற்றி அனுப்புவது.

(v) வியாங்கொடை, மிறிகம, கம்பகா, அம்பககாவத்த பகுதிகளி லுள்ள பாடசாலைகளுக்கு உறெட்டி கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பாண்காரருக்கு வியாங்கொடை நிலையத்திலிருந்து கெயர் உறெட்டி மா ஏற்றி அனுப்புவது.

(vi) யாஎலப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு உறெட்டி கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பாண்காரருக்கு யாஎல நிலையத்திலிருந்து கெயர் உறெட்டி மா ஏற்றி அனுப்புவது.

(vii) வத்தளை, மகாற, கெலனியா, வெதமுல்ல பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குச் சார்மஸ் கிருனறி நிலையத்திலிருந்து கெயர் பால் மா ஏற்றி அனுப்புவது.

(viii) யாஎலப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு யாஎலநிலையத் திலிருந்து கெயர் பால்மா ஏற்றி அனுப்புவது.

(ix) நீர்கொழும்பு, மினுவங்கொடைப் பகுதிக்களிலுள்ள பாடசாலை களுக்கு நீர்கொழும்பு நிலையத்திலிருந்து கெயர் பால் மா ஏற்றி அனுப்புவது.

(x) வியாங்கொடைப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு வியாங்கொடை நிலையத்திலிருந்து கெயர் பால் மா ஏற்றி அனுப்புவது.

(xi) மிறிகமா பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு வியாங்கொடை நிலை யத்திலிருந்து கெயர் பால்மா ஏற்றி அனுப்புவது.

(xii) கம்பகா பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு வியாங்கொடை நிலையத்திலிருந்து கெயர் பால் மா ஏற்றி அனுப்புவது.

(xiii) அம்பககாவத்த பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு வியாங் கொடை நிலையத்திலிருந்து கெயர் டால் மா ஏற்றி அனுப்புவது.

**கவனிக்க.**—ஒவ்வொரு பாடசாலைத்தவணைக்கும் (ரேர்முக்கும்) ஏறக் குறைய இருமுறை உறெட்டிமாவும், ஒருமுறை பால் மாவும் அனுப்பப் படும்.

ஏற்றி அனுப்பவேண்டிய உறெட்டி மா 50 அல்லது 100 அல்லது 150 இருத்தல் மூட்டைகளைக் கொண்டன. பால் மா 54 இருத்தல் பெட்டிகளிலும் 100 அல்லது 150 இருத்தல் மூட்டைகளிலும் இருக்கும் ஒவ்வொரு வகைக்குந் தனித்தனியாக ஏற்றுமதிச் செலவு வீதங் கூறப்பட வேண்டும். உறெட்டி மாவிற்கு ஒரு மூட்டைக்கு ஒரு கட்டை வீதமும் பால் மாவுக்கு ஒரு பெட்டி அல்லது ஒரு மூட்டைக்குப் பகுதி வீதமும் ஏற்றுமதிச் செலவு கூறப்படவேண்டும்.

4.9.65 ந் திகதி சனிக்கிழமை மத்தியானம் 12 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் இக்கந்தோரில் கொடுக்கப்படும். ஆனல் பிரமாணங்களின்படி செய்யவேண்டிய காரியங்கள் பலவுள. இக்காரியங்களை முடிப்பதற்கு நேரமெடுக்கும். ஆகையால் இவ்வில்லங்களை நீக்குவதற்காகக் கேள்விப் பத்திரகாரர் சனிக்கிழமைக்கு முன்பே கேள்விப்பத்திரங்களைப் பெறும்படி புத்திமதி கூறப்படுகின்றனர். கொழும்பு 7, கிறீன் பாத்தில் உள்ள இக்கந்தோரில் (கிளை அ.சி.), அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள ஏதேனும் ஒரு கச்சேரியில் கட்டுக்காசு ரூபா 100 கட்டி அதற்குரிய பற்றுச சீட்டைச் சமர்ப்பித்தபின்தான் கேள்விப் பத்திரமொன்று கொடுக்கப்படும். எவராயினும்விண்ணப்பித்துத் தெரிவுசெய்யப்பட்டபின்கொந்தருத்துக்கு ஒப்பந்தம் செய்ய மறுக்கின் அல்லது கொந்தருத்துக்குரிய பிணைக்காசு கட்டாவிடின், அதாவது தெரிவு செய்யப்பட்டு எழுத்தின்மூலம் அறிவித்த பின் 10 நாட்களுக்குள் இவற்றைச் செய்யாவிடின் மேற்குறிக்கப்பட்ட கட்டுக்காசை முடிக்கு இழந்தவராவர். செக்ஸ், மணிஓடர், போஸ்ரல் ஓடர் ஆகிய இவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. திருப்பிக்கொடுப்பதற் குரிய இக்கட்டுக்காசைக் கட்டுவதிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட சொசயிற்றிகள் (சபைகள்) விடுபட்டுள்ளர் (அல்லது நீக்கப்பட்டுள்ளர்).

விண்ணப்பஞ் செய்ய எண்ணுமொருவர் ஒரு கேள்விப்பத்திரம் பெறுவதற்குமுன்தான் நிலையான ஆதனங்கள் ரூபா 15,000 க்குக் குறையாமல் உடையவர் என்று ஒரு வாக்குறுதிப் பத்திரத்தையும் தான் ஒரு லொறியாகுதல் வைத்திருக்கிருரென்றும் இவ்வருஷத்துக்குரிய லைசென்ஸ் அதற்குப் பெற்றிருக்கிறதற்கு அத்தாட்சியையும், கொழும்பு 7, கிறீன் பாத்தில் உள்ள கொழும்புப் பகுதி உதவி வித்தியாதிபதிக்குச் சமர்ப்பிக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கங்கள், கிராம வளர்ச்சிச் சங்கங்கள், தொழிலாளர் உறவுச் சங்கங்கள் முறையே கூட்டு றவுச் (கோப்பறற்றிவ்) சங்கங்களின றெசிஸ்ரார் இடமிருந்தும், கிராம வளர்ச்சிச் சங்கங்களின் டைரக்ரரிடமிருந்தும், தொழிலாளர் கமிஷனரிட மிருந்தும் தாம் இவ்வேலைகளைச் செய்வதற்குப் போதிய ஆற்றலும் தகுதியும் உடையவரென்று தராதரப்பத்திரம் அல்லது பத்திரங்கள் பெற்று தாம் கேள்விப்பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்கள் பெறு வதற்குமுன் கொழும்பு 7, கிறீன் பாத்திலுள்ள கொழும்புப் பகுதி உதவி வித்தியாதிபதிக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இந்நிபந்தனைகளை நிறை வேற்ற முடியாத விண்ணப்பஞ் செய்ய, அதாவது கேள்விப்பத்திரங்களை அனுப்ப எண்ணும் (அல்லது விரும்பும்) எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கமுடியாது.

இவற்றிற்குரிய வேறு விவரங்களை எல்லாம் கொழும்பு 7, கிறீன் பாத்தில் உள்ள கொழும்புப் பகுதி உதவி வித்தியாதிபதியிடம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் அனுப்ப எண்ணுபவர்கள் கடைசிநேரம் மட்டும் இராமல் ஏற்கெனவே வேண்டிய விவரங்களைப் பெறும படி புத்திமதி கூறப்படுகின்றனர்.

எம். ஏ. பெரேரா,
உதவி வித்தியாதிபதி, கொழும்பு
பிரதேசம் (றீச்சன்).

வித்தியா கந்தோர்
கிறீன் பாத், கொழும்பு 7,
1965 ம் ஆண்டு ஆகஸ்ற் மீ 6 ந் உ.

8-419—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, நாராகேனபிட்டி, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 1965 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1 ஆம் திகதி மு. ப. 10 மணிவரை பொலனறுவை டிப்போவில் கட்டடங்களை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பிரதம சிவில் பொறியியலாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ரூபா 1,00,000 க்கும் அதறகு மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட அரசாங்க இ. போ. ச. கொந்தராத்துக் காரர்கள் மாத்திரமே கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பர். அவர் களுடைய சான்றேலைகள் பிரதம சிவில் பொறியியலாளரின் பரி சோதனைக்குக் காட்டப்பட வேண்டும். சான்றேலைகள் அங்கீகரிக்கப் பட்டால் கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திர கட்டுப்பணமாக ரூபா 200 ஐக் கட்ட வேண்டும்.

எல்லாக் கேள்விப்பத்திரங்களும் பிரதம சிவில பொறியியலாளரி மிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் செய்யப்பட வேண்டும் கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டுவதின் பேரில் 1965 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை இவ கேள்விப்பத்திரச் சாதனங்களை வழங்குவார்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

8-393—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை அரச கடற்படை

### ஏலவிற்பனை

1965 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை டொக்யாட்டில் உபயோகமற்ற பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

2. பொருட்களை விற்பனை அன்று காலை 8 மணிமுதல் பார்வையிடலாம்.

3. ஏலம் முடிந்த பொருட்களுக்கு உடனே முழுப்பணமும் கட்டவேண்டும். வாங்கிய சாமான்களை செப்டம்பர் மாதம் 1 ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

ஆர். கதிர்காமர்,
கடற்படைத் தளபதி.

8-266—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

---

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

"ஏ"

## பிறதேசக் குடிவகைத் தவறணைக் குத்தகை விற்பனவு, 1965/66—மட்டக்களப்பு மாவட்டம்

**கீழ்க்காணும் இடத்தில் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு புரட்டாதி 30 ந் திகதி முடியவுள்ள கால எல்லைவரை தவறணை லைசென்ஸ் பெற்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரால் அனுமதிக்கப்பட்ட தகுதியான இடத்தில் பிறதேசக் குடிவகை விற்கும் பிரத்தியேக உருத்தை வாங்குவதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் கீழே கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இத்தால் வரவழைக்கப்படுகின்றன.**

(அ) 1964 ம் ஆண்டு ஆனி மாதம் 26 ந் திகதி வெளியான 14,080 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் பிரதேசக் குடிவகைத் தவறணை குத்தகை விற்பனை நிபந்தனைகள்.

(ஆ) 1965 ம் ஆண்டு வைகாசி மாதம் 7 ந் திகதி வெளியாய 14,390 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்த 536 ம் இலக்க மதுபானத் தீர்வை லைசென்ஸ் பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையனவாய் பொது நிபந்தனைகள்.

(2) **ரூபா** 500 கட்டுப்பணமாகக் கட்டிய யாதேனுமொரு கச்சேரிப் பற்றுச் சீட்டை ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்துடன் அணைத்திருத்தல் வேண்டும்.

(3) கீழே கூறப்படும் காரியாலயங்களில் பெறற்பாலனவாய மாதிரிப் பத்திரங்களில் ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப் பத்திரமும் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும் :—

(அ) யாதேனும் கச்சேரி,

(ஆ) மதுவரி அதிகாரியின் காரியாலயம், கொழும்பு,

(இ) மதுவரி உதவி அதிகாரியின் காரியாலயம், கண்டி,

(ஈ) வட்டார மதுவரிக் காரியாலயம், திருகோணமலை.

(4) ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக் கொள்ளப் படும். இந்த முடிவடையும் நேரத்தில் ஒப்பந்தக் கேள்வியாளர் சகலரும் இக்கச்சேரியில் சமூகமாயிருக்க வேண்டும்.

மட்டக்களப்பு நகரசபைப் பிரதேசத்திலுள்ள புளியந்தீவில் 1 ம் வட்டாரத்துக்குள் தவறணை இடம்பெற வேண்டும். மேலதிக விளம்பரங்களை மட்டக்களப்பு கச்சேரிக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ஜி. ஜி. ஒ. குணசேகரா,
பதில் அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டம்.

மட்டக்களப்புக் கச்சேரி,
7.8.65.

8-417/1.—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

---

"ஏ"

## சாராயத் தவறணைகள் குத்தகை விற்பனவு, 1965/66

### மட்டக்களப்பு மாவட்டம்

கீழ்க்காணும் சாராயத்தவறணைகளில் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி முடியவுள்ள கால எல்லைவரை சில்லறைக்குச் சாராயத்தை விற்கும் பிரத்தியேக உரித்தை வாங்குவதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் கீழே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய இத்தால் வரவழைக்கப்படுகின்றன.

(அ) 1965 ம் ஆண்டு வைகாசி மாதம் 28 ந் திகதி வெளியான 14,407 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் சாராயக்குத்தகை விற்பனை நிபந்தனைகள் ;

(ஆ) 1965 ம் ஆண்டு வைகாசி மாதம் 7 ந் திகதி வெளியான 14,390 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்த 536 இலக்க மதுபானத் தீர்வை அறிவித்தலிற் காணப்படும் மதுபானத்தீர்வை லைசென்ஸ் பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையனவாய பொது நிபந்தனைகள் ;

(2) ஒவ்வொரு தவறணைக்கும் ரூபா 3,000 வீதம் கட்டுப்பணமாகக் கட்டிய யாதேனுமொரு கச்சேரிப் பற்றுச்சீட்டை ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்துடன் அணைத்திருத்தல் வேண்டும்.

(3) கீழே கூறப்படும் காரியாலயங்களில் பெறற்பாலனவாய மாதிரிப் பத்திரங்களில் ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப் பத்திரமும் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும் :—

(அ) யாதேனும் கச்சேரி ;

(ஆ) மதுவரி அதிகாரியின் காரியாலயம், கொழும்பு ;

(இ) மதுவரி உதவி அதிகாரியின் காரியாலயம், கண்டி ;

(ஈ) வட்டார மதுவரி காரியாலயம், திருகோணமலை.

(4) 1965 ஆண்டு புரட்டாதி மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை கீழே கூறப்பட்ட நேரத்தின்படி ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பெறுதற்குக் குறிப்பிட்ட இறுதி நேரத்தில் ஒவ்வொரு தவறணைக் குத்தகை ஒப்பந்தக் கேள்வியாளர்கள் சகலரும் இக்கச்சேரியில் சமூகமாயிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மட்டக்களப்புக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ந் உ.

ஆர். ஜி. ஜி. ஒ. குணசேகரா,
பதில் அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டம்.

அனுமதி பெற்ற தவறணைகளின் நிரல் பின்வருமாறு :—

| தொடர் இல. | பிரிவு | தவறணைகளிற் தெரியப்படும் உள்ளூர்ப் பிரதேசம் | கேள்விப் பத்திரங்கள் ஏற்க முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| 1. | கோறளைப்பற்று | வாழைச்சேனை கிராமத்துக்குள் | மு.ப. 10.00 |
| 2. | ஏருவூர் பட்டினசபை | ஏருவூர் பட்டினசபை பிரதேச எல்லைக்குள் | மு.ப. 11.00 |
| 3. | மட்டக்களப்பு நகர சபை 6 ம் வட்டாரம் | மட்டக்களப்பு நகரசபை 6 ம் வட்டாரத்துக்குள் | ந.ப. 12.00 |
| 4. | எருவில் போரதீவு | எருவில் கிராமத்துக்குள் | பி.ப. 2.00 |

8-417/2.—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.